## மார்ச் – 26 – செவ்வாய்

### எளியோரை நேரிய வழியில் அவர் நடத்துகின்றார்: திபா. 25:9

### முதல் வாசகம் : தானியேல் (இ)1 : 2, 11 - 19

அப்பொழுது அசரியா நெருப்பின் நடுவில் எழுந்து நின்று, உரத்த குரலில் பின்வருமாறு மன்றாடினார் உமது பெயரை முன்னிட்டு எங்களை என்றும் கைவிட்டுவிடாதீர் உமது உடன்படிக்கையை முறித்துவிடாதீர். உம் அன்பர் ஆபிரகாமை முன்னிட்டும், உம் ஊழியர் ஈசாக்கை முன்னிட்டும் உம் தூயவர் இஸ்ரயேலை முன்னிட்டும்,உம் இரக்கம் எங்களைவிட்டு நீங்கச்செய்யாதீர். விண்மீன்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் அவர்களின் வழிமரபினரைப் பெருகச்செய்வதாக நீர் அவர்களுக்கு உறுதி அளித்தீர். ஆண்டவரே, எங்கள் பாவங்களால் மற்ற மக்களினங்களைவிட நாங்கள் எண்ணிக்கையில் குறைந்துவிட்டோம் உலகெங்கும் இன்று தாழ்வடைந்தோம். இப்பொழுது எங்களுக்கு மன்னர் இல்லை, இறைவாக்கினர் இல்லை, தலைவர் இல்லை எரிபலி இல்லை, எந்தப் பலியும் இல்லை. காணிக்கைப்பொருளோ தூபமோ இல்லை. உம் திருமுன் பலியிட்டு,உம் இரக்கத்தைப் பெற இடமே இல்லை. ஆயினும், செம்மறிக்கடாக்கள், காளைகளால் அமைந்த எரிபலி போலும் பல்லாயிரம் கொழுத்த ஆட்டுக்குட்டிகளாலான பலிபோலும் நொறுங்கிய உள்ளமும் தாழ்வுற்ற மனமும் கொண்ட நாங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவோமாக. அவ்வாறே எமது பலி இன்று உம் திருமுன் அமைவதாக் நாங்கள் முழுமையாக உம்மைப் பின்பற்றுவோமாக் ஏனெனில் உம்மில் நம்பிக்கை வைப்போர் வெட்கத்திற்கு ஆட்படமாட்டார். இப்பொழுது நாங்கள் முழு உள்ளத்துடன் உம்மைப் பின்பற்றுகிறோம் உமக்கு அஞ்சி, உம் முகத்தை நாடுகிறோம். எம்மை வெட்கத்துக்கு உள்ளாக்காதீர் மாறாக, உம் பரிவிற்கு ஏற்பவும், இரக்கப் பெருக்கிற்கு ஏற்பவும் எங்களை நடத்தும்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது இரக்கத்தையும் பேரன்பையும் நினைத்தருளும்.

### நற்செய்தி : மத்தேயு 18 : 21 – 35

அக்காலத்தில் பேதுரு இயேசுவை அணுகி, ”ஆண்டவரே, என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் எனக்கு எதிராகப் பாவம் செய்துவந்தால் நான் எத்தனை முறை அவரை மன்னிக்க வேண்டும்? ஏழு முறை மட்டுமா? எனக்கேட்டார். அதற்கு இயேசு அவரிடம் கூறியது: ”ஏழுமுறை மட்டுமல்ல. எழுபது தடவை ஏழுமுறை என நான் உனக்குச் சொல்கிறேன். விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம் ஓர் அரசர் தம் பணியாளர்களிடம் கணக்குக் கேட்க விரும்பினார். அவர் கணக்குப் பார்க்கத் தொடங்கியபொழுது, அவரிடம் பத்தாயிரம் தாலந்து கடன்பட்ட ஒருவனைக் கொண்டு வந்தனர். அவன் பணத்தைத் திருப்பிக் கொடுக்க இயலாத நிலையில் இருந்தான். தலைவரோ, அவனையும் அவன் மனைவி மக்களோடு அவனுக்குரிய உடைமைகள் யாவற்றையும் விற்றுப் பணத்தைத் திருப்பி அடைக்க ஆணையிட்டார். உடனே அப்பணியாள் அவர் காலில் விழுந்து பணிந்து, ”என்னைப் பொறுத்தருள்க. எல்லாவற்றையும் உமக்குத் திருப்பித் தந்து விடுகிறேன்” என்றான். அப்பணியாளின் தலைவர் பரிவுகொண்டு அவனை விடுவித்து அவனது கடன் முழுவதையும் தள்ளுபடி செய்தார். ஆனால் அப்பணியாள் வெளியே சென்றதும், தன்னிடம் நூறு தெனாரியம் கடன்பட்டிருந்த உடன் பணியாளர் ஒருவரைக் கண்டு, ”நீ பட்ட கடனைத் திருப்பித் தா” எனக்கூறி அவரைப் பிடித்துக் கழுத்தை நெரித்தான். உடனே அவனுடைய உடன் பணியாளர் காலில் விழுந்து, என்னைப் பொறுத்தருள்க. நான் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்” என்று அவனைக் கெஞ்சிக் கேட்டார்.ஆனால் அவன் அதற்கு இசையாது, கடனைத் திருப்பி அடைக்கும்வரை அவரைச் சிறையிலடைத்தான். அவருடைய உடன் பணியாளர்கள் நடந்ததைக் கண்டபோது மிகவும் வருந்தித் தலைவரிடம் போய் நடந்தவற்றையெல்லாம் விளக்கிக் கூறினார்கள். அப்போது தலைவர் அவனை வரவழைத்து, ”பொல்லாதவனே, நீ என்னை வேண்டிக் கொண்டதால் அந்தக் கடன் முழுவதையும் உனக்குத் தள்ளுபடி செய்தேன்.நான் உனக்கு இரக்கம் காட்டியதுபோல நீயும் உன் உடன்பணியாளருக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டும் அல்லவா? என்று கேட்டார். அத்தலைவர் சினங் கொண்டவராய், அனைத்துக் கடனையும் அவன் அடைக்கும்வரை அவனை வதைப்போரிடம் ஒப்படைத்தார். உங்களுள் ஒவ்வொருவரும் தம் சகோதரர் சகோதரிகளை மனமார மன்னிக்கா விட்டால் விண்ணுலகில் இருக்கும் என்தந்தையும் உங்களை மன்னிக்க மாட்டார்.

**தியானம்:** நாங்கள் மன்னிக்கவும், மனமாற்றம் அடைய வேண்டுமென்று இறைவார்த்தையில் பல இடங்களில் பார்க்கின்றோம். ஆனால் நாங்களோ இறைவாத்தையை வாசிக்காமல் அதை உணர்ந்து கொள்ளாமல் மற்றவர்களை மன்னிகைத் தவறிவிடுகின்றோம். இன்றைய இறைவார்த்தையில் பேதுரு இயேசுவடம் ஷஷஆண்டவரேஎன் சகோதரன் எனக்கெதிராக பாவம் செய்தால் ஏழுமுறைமட்டுமா மன்னிக்க வேண்டுமென்று கேட்கிறார்,ஆனால் இயேசுவோ ஷஷஏழு முறை மட்டுமல்ல எழுபது தடவை ஏழு முறை என்று பதிலளிக்கின்றார். (மத்.18:22). அவர் இன்று எங்களிடமும் அவ்வாறே எதிர்பாக்கின்றார். ஆனால் நாங்கள் எங்கள் சகோதர சகோதரிகளை ஏன் மன்னிக்கவேண்டும்? எதற்காக மன்னிக்கவேண்டும்? என்று இறுமாப்புக் கொண்டவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நற்செய்தியல் மன்னிக் மறுத்த பணியாளன் உவமையை இறையரசிற்கு ஒப்பிட்டுக் கூறுகிறார். ஏனென்றால் பணியாளன் தான் பெற்ற கடனைெ காடுக்கமுடியாத நிலையில் தலைவனிடம் கூற தலைவன் அவரை மன்னிக்கின்றார், ஆனால் அப்பணியாளனோ தன்னிடம் கடன் பெற்றவரை மன்னிக்க மறுத்து விடுகின்றான். அதையறிந்த தலைவர் அவரைஅழைத்து தனது பணத்தை திருப்பித் தரும்வரைசிறையிலடைத்து விடுகின்றார். (18:24) நாம் ஆண்டவரே ஆண்டவரே என்று எத்தனை தடவைகள் செபித்தாலும் அவர் விருப்பத்தின்படி மன்னித்து வாழாதிருப்போமாயின் எமக்கும் பணியாளனுக்கு தலைவர் தண்டனை கொடுத்தது போன்று இறைமகன் இயேசுவும் பல சோதனைகள், நோய்கள், வேதனைக்குரிய சம்பவங்கள் போன்றவற்றை, நாங்கள் உணர்ந்து மனந்திரும்வரை வருவவிப்பார் .இது நிரந்தரமான தண்டனைஅல்ல, மாறாக அன்று முடக்குவாத முற்றநோயாளியை நால்வர் இயேசுவால் விடுதலை கொடுக்கமுடியும் என்று நமம்பிக்கையுடன் அவரை தூக்கிவருகின்றார்கள். அவர்களது நம்பிக்கையின் நிமித்தம் ஷஷஉன்பாவங்கள் மன்னிக்கப்பட்டன எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு செல்” என்று அனுப்பிவைக்கின்றார். எனவே எமக்கு ஏற்படும் நோய்களோ, வேதனைக்குரிய சம்பவங்களோ எமது பாவங்களினால் ஏற்படலாம், எதுவாக இருந்தாலும் இறைவனிடம் நாம் சிறுவயதுமுதல் இற்றைவரைக்கும் செய்தபாவங்களைஅவர் பாதம் ஒப்படைத்துதவக்காலத்தில் மன்னிப்புவேண்டுவோம். ஷஷஎன் இளமைப் பருவத்தின் பாவங்களையும்,குற்றங்களையும் நினையாதேயும் உமது பேரன்பிற்கேற்ப என்னை நினைத்தருளும்” (தி.பா.25:7)